# இலங்கையில் மலையகத் தமிழர்கள் எதிர்கொள்கின்ற அரசியல், சமூகப்பிரச்சினைகள்: 2010க்குப் பின்னரான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**தினுஸ்ப்ரியா, வ.,கணேசலிங்கன், கே.ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
vdinush97@gmail.com

*ஜனநாயக அரசுகளுக்குள் வாழுகின்ற மக்கள் சமூகம் அனைத்திற்கும் சமஅந்தஸ்து, சமவாய்ப்பு என்பன வழங்கப்பட்டு, அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இத்தன்மையானது மிகவும் பலவீனமான ஒன்றாகவே உள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மக்கள் சமூகம் அரசொன்றில் வாழும்போது அவர்கள் அந்நாட்டு பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்கள் அந்நாட்டின் சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கான வழிவகைகளை பின்பற்றுவது அரசுகளின் அடிப்படை நியதியாகும். ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் துரதிஸ்டவசமாக இலங்கையின் ஆட்சியாளர்கள் இருநூறு வருடங்களாக இலங்கையில் வாழந்துவருகின்ற மலையகத் தமிழ் சமூகத்தை அடிமைகளாக பிரயோகப்படுத்தும் அரசியலையே சுதந்திர காலத்திலிருந்து மேற்கொண்டு வருகின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகள் கூட ஒப்பீட்டளவில் பல முன்னேற்றங்களை கண்டுள்ளன. ஆனால் மலையக சமூகம் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அரசியல் மற்றும் சமூக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருக்கும் மலையக சமூகம் காலனித்துவத்திலிருந்து விடுபட்ட போதும் பின்காலனித்துவ அரசு பற்றிய கோட்பாட்டாளர் "ஹம்சா அலவி" குறிப்பிடுவது போன்று மலையக சமூகம் இன்றளவும் அடிமைத்தனத்திலிருந்து விடுபடாத நிலையிலேயே உள்ளது. இலங்கையில் 1980களுக்குப் பின் ஆயுதப்போராட்டம் எழுச்சி பெற்றதைத் தொடர்ந்து மலையகப்பகுதிகளிலும் தேசியம் சார்ந்த ஒரு விழிப்புணர்வு எழ ஆரம்பித்தது. ஈழப் போராட்ட அமைப்புக்களுடன் இணைந்து போராடிய ஒரு சூழல் காணப்பட்டது. இது பிற்காலத்தில் பிரஜாவுரிமை உள்ளிட்ட பிற சலுகைகள் வழங்கப்பட காரணமாகவிருந்தபோதும் அவை நிலையான அபவிருத்திக்கான ஏற்பாடாக அமையவில்லை. அவையனைத்தும் அவர்களை தற்காலிகமாக திருப்திப்படுத்தும் செயலாகவே இருந்தது என்பதே நிதர்சனமாகும். மலையக சமூத்தின் விழிப்புணர்வற்ற போக்கும் சாதி கட்டமைப்பின் பலவீனத்தையும் ஆட்சியாளர்கள் தமக்கு சார்பாக மிகச்சிறந்த முறையில் கையாண்டு வருகின்றனர். ஆட்சிாளர்களும், தொழிற்சங்கங்களும் முற்போக்கான வகையில் செயற்படாது மக்களின் அடிமைத்தனத்தின் தொடர்ந்தேர்ச்சியான நிலைமைக்கு தூபமிட்டு வருகின்றனர். இருநூறு வருடங்களாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத ஓர் அவல வாழ்க்கையினையே அனுபவித்து வருகின்றன. காலனித்துவக் காலப்பகுதியில் ஏனைய நாடுகளில் குடியமர்த்தப்பட்ட மக்கள் இன்று பல்வேறு துறைகளிலும் சாதித்துவர இலங்கையில் மலையகத்தமிழர்கள் தோட்டத் துறை யிலேயே முடங்கி கிடக்கின்றனர். இவர்களின் இந்த அவல வாழ்க்கைக்கு பலர் பொறுப்பு கூற வேண்டியவர்களாகவுள்ளனர். குறிப்பாக அவர்களது பிரஜாவுரிமைகள் பறிபோவதற்கு*